1972 ஆகஸ்ட் 21]

Government Grant for Road Improvement

*128 Q.—THIRU S. VELLAPANDIAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) the amount granted to the Madras Corporation by the Government for road improvement during 1971–72; and

(b) the steps taken to follow up the progress of road improvements?

சாலை மேம்பாட்டிற்காக அரசு கொடுத்த தொகை

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன்: மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சாலை மேம்பாட்டிற்காக 1971–72-ல் சென்னை மாநகராட்சிக்கு அரசு கொடுத்த தொகை எவ்வளவு?

(இ) சாலை மேம்பாடுகளின் முன்னேற்றத்தைத் தொடர்ந்து பேணி வர எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) சென்னை நகரச் சாலைகளைச் சீர்படுத்துவதற்காக 1971–72-ல் சென்னை மாநகராட்சிக்கு ரூ. 20.00 இலட்சம் கடனாகவும் ரூ. 30.00 இலட்சம் மானியமாகவும் வழங்கப்பட்டுள்ளது.

(இ) சென்னை நகரச் சாலைகளைச் சிறந்த முறையில் பராமரிப்பது சென்னை மாநகராட்சியின் சட்டப்படியான பொறுப்பாகும். எனினும், வழங்கப்பட்டுள்ள தொகையின் அடிப்படையில் அவ்வேலைகளுக்கான செலவுகளை அரசு ஆய்வு செய்கிறது.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்: தலைவர் அவர்களே, அண்ணா சாலை நம்முடைய தமிழக அரசு நிர்வாகத்தின் கீழ் இல்லை. அது மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் இருப்பதால், மவுண்டு ஃபார்மசி போன்ற இடங்களில் "என்கிரோச்மெண்டை" நீக்குவதற்கு —நான் கார்ப்பரேஷன் அங்கத்தினர் முனுசாமி அவர்களிடம் பேசும்பொழுது அது எங்களுடைய நிர்வாகத்தில் இல்லையென்று சொன்னார்—அந்த நிர்வாகத்தையும் நம்மிடம் கொண்டுவந்து அடிக்கடி ஏற்படுகிற என்கிரோச்மெண்டுகளை—மிட்டாய்க் கடைகள் வைத்திருக்கிறார்கள்—அப்புறப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, என்கிரோச்மெண்டுகளை நீக்குகிற பொறுப்பை மாநகராட்சி மன்றம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர்கள் யோசனையின் பேரில் காவல் துறையினரும், மற்றத் துறையினரும் உதவி செய்வார்கள்.

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் : தலைவர் அவர்களே, இதைப் போல சாலை மேம்பாட்டிற்கு ஊராட்சி ஒன்றியங்களுக்குப் பணம் ஒதுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட தொகை மாநிலம் முழுவதற்கும் ஒதுக்கப்பட்டு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்போது சாலைகள் பராமரிப்பில் கூட ஆயிரம் கிலோ மீட்டர்களைப் பெருவழித்துறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வருகிறபோது, ஊராட்சி ஒன்றியங்கள் ஊராட்சி மன்றங்களின் சாலைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற அளவுக்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல. வேறு பல வகைகளிலும் இணைப்புச் சாலைகளை மேம்படுத்துவதற்கு தனி முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, சென்னை மாநகராட்சிக்கு ஒதுக்கப்பட்ட இந்த மானியத் தொகை நெடுஞ்சாலைகளுக்குச் செலவழிக்கப்படுகிறதா, அல்லது பெரும் தெருக்களுக்குச் செலவழிக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன். அப்படியானால், எந்தெந்த நெடுஞ்சாலைகளுக்குச் செலவழிக்கப்படுகிறது என்பதை அமைச்சரவர்கள் கூற முடியுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாநகராட்சி மன்றத்திற்கு என்று சொல்லப்பட்டிருக்கிற காரணம், மாநகராட்சி மன்றத்தின் மேற்பார்வையின் கீழே உள்ள சாலைகளுக்குத் தான் ஒதுக்கப்பட்டுள்ளது. பெரும் மழை வந்து சேதம் ஏற்பட்டதால், மேற்கொண்டு பத்து லட்சம் ரூபாய் மானியமாக அளிக்கப்பட்டது. மாநகராட்சியின் கீழே உள்ள சாலைகளுக்குத் தான் இந்த மானியம் வழங்கப்படுகிறது.